JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# தமிழில் தலையங்கம் சில அவதானிப்புகள்

**முதுமுனைவர் சு.பா. பாலமுருகன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.
மின்னஞ்சல் : balatangam@gmail.com

**முன்னுரை**

பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இதழ்களில் இடம்பெறும் செய்திகளுக்கிடையே கருத்துப்படம் ,செய்தித்துளிகள், விளம்பரம் போன்றவற்றோடு தனித்துவமாக விளங்குவது தலையங்கம் என்றால் அதுமிகையன்று.இதழ் நடத்துபவரின் எண்ணங்களுக்கு எழுத்து வடிவம் தருவதாக அமைவது தலையங்கம். இதனை ஆங்கிலத்தில் Editorial என்பர். தலையங்கம் இதழ் ஆசிரியருக்கும் படிப்பவருக்கும் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் இடமாகவும் அமைகிறது. தலையங்கம் ஆசிரியர் பகுதி என்ற பெயரிலும் பத்ராதிபர் என்ற பெயரிலும் வருவதுண்டு. அத்தகைய தலையங்கத்தின் தன்மைகளைப் பின்வருமாறு இக்கட்டுரை ஆராய்கிறது.

**தலையங்கம்**

மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்ற கருத்தை வெளியிடுவதாகவும் தலையங்கத்தின் பொருளுக்கேற்ப அதன் நோக்கமும் மாறுபடுகின்றது.இதழ் ஆசிரியருக்கான பகுதியாக அமைவதால் ஆசிரியரின் நோக்கமும் தலையங்க நோக்கமாகவே அமையும்.பொதுமக்களின் கருத்து வெளிப்பாடாகவும் தலையங்கம் அமைவதுண்டு. இதழ் வெளியாகும் காலகட்டத்தில் நடந்த சில முக்கிய நிகழ்வுகளை அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளோடு எடுத்துக்காட்டும் கருத்துக்களாகவும் தலையங்கம் அமைக்கப்படுகிறது.

ஒருபக்கச் சார்பு இல்லாமல், மக்களுக்குப் பயன்தரும் கருத்தோடு நுண்மை, தெளிவு, சுருக்கம் இவற்றுடன் ஆய்வு நிலையிலும் தலையங்கம் அமைய வேண்டும். எனவே இதழ்களில் ஆசிரியர் பகுதியாக அமையும் தலையங்கம் நடுவுநிலைத் தன்மையோடு அமைகின்றது.

**கருத்து உருவாக்கல்**

மக்கள் கருத்து எத்தகையது என்பதை எடுத்துக் கூறுவதோடு மட்டுமல்லாமல், நன்கு ஆராய்ந்து மக்களுக்கு நன்மை தரக்கூடிய கருத்தினை உருவாக்குவதும் தலையங்கமே ஆகும். மக்களைக் குழப்பாமல் ஒரு தீர்வு காண்பதற்கு இது உதவி செய்கிறது .விமர்சனத்தின் வாயிலாக உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவும் சிக்கலைத் தீர்க்கும் நோக்கம் கொண்டு தெளிவாக முடிவுகளை எடுக்கவும் துணைபுரிகின்றது.

**தலையங்கத்தினைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள்**

இதழ்களின் இதயப்பகுதி தலையங்கம்.மனித உடலில் தலை எவ்வளவு முக்கியமான பகுதியோ அதுபோல இதழில் மிகமுக்கியமான பகுதி ஆசிரியவுரையான தலையங்கம் ஆகும். எவ்விதமான அரசியல் தலையீடும் இன்றி நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி மக்களின் நலன்கருதி விரிவாகப் பேசும் பகுதியாகத் தலையங்கம் காணப்படுகின்றது. இவ்வாறு உள்ள தலையங்கத்தினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

தலையங்கம் எழுதுகின்றவர் எது காலத்தின் தேவை என்பதனைத் தீர்மானித்து தங்களது கொள்கையின் அடிப்படையில் தலையங்கம் எழுதுவர்.இத்தலையங்கப் பகுதியினைத் தனி ஒருவராகவோ அல்லது ஆசிரியர் குழுவாகவோ எழுதமுடியும். சமூகத்தின் எவ்விதமான பிரச்சினைகளையும் மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வதில் தலையங்கம் தனியான இடம் வகிக்கின்றது.

1. “பிற பகுதிகளைப் போன்று தலையங்கப் பகுதி பெரும்பாலோரால் விரும்பிப் படிக்கப்படுவதில்லை என்றாலும் நாட்டின் ‘அறிவுஜீவிகளும் கருத்துக் கணிப்பாளர்களும் தலையங்கத்தை ஊன்றிப் படிக்கின்றனர். ஒரு நாளிதழின் செல்வாக்கிற்கு அதன் தலையங்கம் பெரும்பங்கு ஆற்றுவதுண்டு” என்று கி.ராசா கூறுகின்றார்( கி.ராசா, இதழியல் ஓர் அறிமுகம், ப.84).
2. “இதழ்கள் சமுதாயச் சிக்கலை அறிவுச் சல்லடையில் சலித்தெடுக்கும் போது தலையங்கம் பிறக்கிறது. ஆடல் வல்லார்க்கு அணிகலன் போலத் தாளிகை களுக்குத் தலையங்கம் சிறப்புத் தருவதாகும். தலையங்கம் இடம்பெறா இதழ்கள் முதுகெலும்பும் நாடும் இல்லா மனிதனையும் மறைதிரை இல்லா வீட்டினையும் அழகுபடுத்தாத கிருஷ்துமஸ் மரத்தினையும் ஒக்கும்” என்ற ‘கெயில்’ கூற்றினை ஆங்கிலத்தில் இருந்து தமிழ்ப் படுத்தித் தருகின்றார் ரா. கோதண்டபாணி (இரா. கோதண்டபாணி, இதழியல், ப.157).

இவற்றின் மூலம் தலையங்கத்தை எழுதும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் குழுவானது உயர்ந்த கொள்கை, சமுதாய நற்சிந்தனை, மக்கள் நலனில் அக்கறை, நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபாடு, புதிய சிந்தனைப் போக்கு, புதியனவற்றைப் படைத்து மக்களுக்குக் கொண்டு செல்லவேண்டும்

என்ற ஆர்வம் போன்றவை ஒருங்கே அமையப்பெற்றிருக்க வேண்டும் என்பதது இதன்வழி அறியமுடிகிறது.

**தலையங்கத்தின் தேவை குறித்த அவதானிப்புகள்**

மக்கள் எப்படிப்பட்ட செய்திகளை விரும்புகிறார்கள் என்பதை அறிந்தும் நடைமுறையில் உள்ள சிக்கல்களை அறிந்தும் அந்தச் சிக்கல்களைத் தலையங்கத்தின் வழி எடுத்துக்கூறியும் தீர்வு சொல்லியும் சிறப்பாகப் பணியாற்றத் தலையங்கம் உதவுகின்றது.

தலையங்கங்கள் பெரும்பாலும்ஆசிரியரின் அல்லது நடத்துபவரின் கல்வி, கேள்வி, மொழிப்பற்று, மொழிப்புலமை ஆகியவற்றிற்கு ஏற்பவே அமைந்து காணப்படுகின்றன. அவை அவரவர் அறிந்த தமிழில், தமிழ் மரபிற்கு ஏற்ற வகையிலும் அல்லாத வகையிலும் வெளியிடப் படுகின்றன.அவ்வக் காலச் சூழ்நிலை, சமயநேர்த்தி, அரசியல் உணர்வு, பகுத்தறியும் தன்மை ஆகியவற்றுக்கு இசைந்த முறையிலும் தலையங்கங்கள் வெளியிடப்படுகின்றன.

”சமயச்சார்பு, வட்டார வழக்கு, ஆசிரியாரின் ஆளுமை ஆகியவற்றிற்கு உகந்த முறையில் தலையங்கம் ஆசிரியர் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன என்று கூறுகிறார் மா.சு.சம்பந்தம்”(மா.சு. சம்பந்தம், தமிழ் இதழியல் களஞ்சியம், ப. 5). இதன் மூலம் தலையங்கங்களை எவ்வாறெல்லாம் வெளிப்படுத்த முடியும் என்பதை உணரமுடிகின்றது.

**இதழின் அளவுகோல்**

தலையங்கம் என்பது இதழுக்குத் தலையாயது எனலாம்.ஓர் இதழின் தனித்தன்மை யினை வெளிப்படுத்துவது தலையங்கமே.அன்றாட முக்கியச் செய்திகள் என்னும் நிலையில் அன்று இடம்பெறும் பொதுவான செய்திகள் வெளிவருவது இயல்பானவொன்று.

”ஒவ்வொரு இதழுக்கும் உரிய தனித்தன்மை என்பது அவ்விதழில் இடம்பெறும் செய்தியினைப் பொருத்தே மதிப்பிடப்படுகிறது.அதிலும் தலையங்கத்தில் இடம்பெறும் செய்தியினைக் கொண்டும் அதன் நடுநிலைமையினைக் கொண்டும் இதழின் பெருமையினை அறியமுடிகிறது” (ம.ஏ. கிருட்டினக்குமார் தலையங்கம் - ஓர் இதழின் அளவுகோல், ப.18) என்று கூறுவதன் மூலம் ஆசிரியருக்குண்டான தனித்தன்மையையும் இதழ்களுக்குண்டான மதிப்பையும் தலையங்கம் பெற்றுத் தருகிறது என்பதை உணர முடிகின்றது.

செய்திகளைக் கொடுக்கும் மொழிநடையில் இதழ்களுக்கிடையே மாற்றம் இருக்குமே ஒழியே பொருள் அளவில் எவ்வித மாறுதலும் அமையாது.

1. “தலையங்கம் இல்லாத இதழ்கள் தலையில்லாத மனிதனுக்கு நிகர். எனவே எவ்இதழாயினும் தலையங்கம் சிறப்பாக அமையும். மனிதக்கு மிகவும் இன்றியமையாத பகுதியாகத் தலையங்கம் விளங்குகிறது” என்று கு.முத்துராசன் கூறுகின்றார்(கு.முத்துராசன், இதழியல் வளர்ச்சியும் மொழிபெயர்ப்பும், ப.287).

2. “ஆசிரியர் தமது கருத்தை வலுவாகக் கூறும் வகையில் தலையங்கத்தை அமைக்கலாம். ஒரு மேற்கோளை மட்டுமே தலையங்கமாக வெளியிடலாம். நெருக்கடி காலத்தில் செய்தித்தாள்கள் முழு உரிமையோடு செயல்பட இயலவில்லை. அப்பொழுது சில இதழ்கள் தலையங்கம் எழுதாமல் வெற்றிடமாகவே வெளியிட்டுத் தங்களது எதிர்ப்பை உயர்த்தின (மா.பா.குருசாமி, இதழியல் கலை, ப.257) என்று கூறுவதன் மூலம் பத்ராதிபர்கள் தங்களின் எதிர்ப்பினைத் தலையங்கத்தின் மூலம் வெளிப்படுத்திய செய்தியை அறியமுடிகிறது.
3. ஜான் ஹோஹன்பர்க் (John Gohenberg) என்பவரின் கூற்றாகச் “செய்தித்தாளில் மிகவும் புறக்கணிக்கப் பெறுகின்ற, குறைவாக மதிப்பிடப் பெறுகின்ற பகுதி தலையங்கமாகும். ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட அமெரிக்க நாளிதழ்கள் தலையங்கம் வெளியிடுவதில்லை. இருந்தாலும் பொதுமக்களுக்குத் தொண்டு செய்யும் இதழியலின் ஒரு தலையாய கருவியாக இது இருக்கின்றது” என்ற கருத்தினைப் பதிவு செய்கிறார் மா.பா. குருசாமி (மா.பா. குருசாமி, இதழியல் கலை, ப.257).

**ஆசிரியரின் தலையீடு**

ஆசிரியவுரை என்பது தலையங்கம் என்றும் கூறப்பெறும். இதழில் வெளியிடப் பெறுகிற செய்திகள், கட்டுரைகள் ஆகியன யார் யாரோ எழுதியனுப்பியவையாக இருந்தாலும் அவ்வெழுத்துகளில் சில இதழாசிரியருடையனவாகவும் இருக்கும். ஆனால் உறுதியாக இதழாசிரியருடையது என்ற நம்பகத்தன்மைக்கு உரியதாக தலையங்கம் அமைகின்றது.

மேலும் இதழின் பிற பகுதிகளைவிட இதழாசிரியரின் கருத்து வெளிப்பாடும் அதிக இடம் தருவது ஆசிரியவுரையாகிய தலையங்கப்பகுதியாகும்.

”இதழினை வெளியிடும் உரிமையாளரின் கருத்து, இதழின் நோக்கம் அல்லது கொள்கை ஆகிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே இதழாசிரியன் உரிமை செயற்படும்.இவை ஒன்றுக்கொன்று முரணாகாதவரை ஆசிரியவுரையில் ஆசிரியரின் கருத்துச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாடும் முழுமை உடையன”(பா.இறையரசன், இதழாளர் பாரதி, ப.137.) என்று கூறுவதன் மூலம் தலையங்கத்தின் முழுமையும் இதழாசிரியரையே சாரும் என்பது தெளிவாகிறது.

4. “தலையங்கம் என்பது, செய்தி ஒன்றினைப் பற்றி எழுதப்படும் கருத்துக் கோவை, வாசகர்களுக்கு அதுபற்றித் தெளிவான நோக்கு ஏற்படும்படி எழுதப்படுவது, அது உண்மைகளையொட்டி ஆசிரியரின் கருத்தைக் கொண்டு அமைவது, ஆசிரியரின் கருத்து சில நாட்களிலோ அல்லது சிறிது காலம் கழித்தோ நடைமுறைக்கு உகந்ததாக இருப்பதை வாசகர்கள் உணரச் செய்வது, நாட்டினை ஆளுவோர், அல்லது நிறுவனங்களோடு

தொடர்புடையவர்கள், பத்திரிகையின் கருத்து என்ன என்று ஆர்வத்தோடு எதிர்பார்க்கும் பகுதி” (மா.ரா.இளங்கோவன், சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம், ப.9) என்பன போன்ற பல்வேறு சிந்தனைகள் தலையங்கம் என்பதற்கான வரையறைகளையும் விளக்கங் களையும் அறிஞர்களால் எடுத்தாளப்பட்டு வருகின்றன.

மேலும் தலையங்கத்தின் செயல்பாட்டினைப் பின்வருமாறு எடுத்துக் கூறலாம்.




## தலையங்கம் அமைப்பு மற்றும் அதன் வகைகள்

ஒரு தலையங்கம் குறைந்த அளவு மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருத்தல் அவசியம் என்பதைப் பின்வரும் செய்தியானது விளக்குகிறது.முதலாவது, ஒரு செய்தி அல்லது ஒரு பிரச்சினை பற்றி எடுத்துரைக்க வேண்டும்.இரண்டாவதாக, அந்தச் செய்தி அல்லது பிரச்சினை பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.மூன்றாவதாக, ஆய்வின் அடிப்படையில் ஒரு முடிவைக் கூற வேண்டும்.

## தலையங்கத்தின் வகைகள்

முதன்மைத் தலையங்கம்; (Main Editorial), துணைத் தலையங்கம் (Sub Editorial) என்று இரு வகைப்படும். முதன்மைத் தலையங்கமும் துணைத் தலையங்கமும் அதற்கென நியமிக்கப்பட்ட ஆசிரியரால் எழுதப்படுவதாகும் என்பதைப் பின்வரும் சான்று மூலம் காணமுடிகின்றது.

“தலையங்கம் முதன்மைத் தலையங்கம், துணைத் தலையங்கம் என்று இருவகைப்படும். முதன்மைத் தலையங்கமும் துணைத்தலையங்கமும் அதெற்கென நியமக்கப்பட்டவரால் எழுதப்படுவனவாகும். தம்முடைய இதழ்க் கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்புடைய கருத்துக்கள் மற்றைய இதழ்களில் வந்தாலும் அவற்றை எடுத்துத் தம் இதழ்களில் சில நேரங்களில் தலையங்கமாகப் பயன்படுத்துவர்”என்று பாரதிதாசனின் இதழ்களை ஆய்வுக்குட்படுத்தி அவற்றில் உள்ள தலையங்கப் பிரிவுகளைப் புலப்படுத்துகின்றார் மா.அண்ணாத்துரை (மா. அண்ணாத்துரை, பாரதிதாசன் இதழ்ப் பணிகள், ப.78).

**தலையங்கம் எழுதுவோரின் ஆற்றல் மற்றும் இயல்புகள்**

தலையங்கம் எழுதுவோர் பல்துறை வல்லுநராக இருப்பர். மிகச்சிக்கலான பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு கூறத்தக்க ஆற்றல் அவர்கட்கு இருக்கும். அப்போது தான் அவர் எழுதும் தலையங்கம் ஆழமுடையதாகவும் நிகழ்ச்சிகளின் பயனுள்ள தரவுகளாகவும் அமைய முடியும்.

தாமதமான செயல்களை விரைவாக்கும் வண்ணம் கருத்துக்களைக் கூறல், தேவையானால் கண்ணோட்டம் இல்லாமல் இடித்துக்கூற, வருமுன் காப்பவர் போல எதிர்கால விளைவுகளைச் சுட்டிக்காட்டி எச்சரித்தல், பொது மக்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை அன்பின் அடிப்படையில் அணுகி அறிவுரை கூறல், படிப்பவர் படிக்கும் பகுதியோடு ஒன்றிவிடுமாறு சுவைபட எழுதுதல் போன்றவை தலையங்க எழுத்தாளருக்கு இருக்க வேண்டிய இயல்புகளாகும்

“ஒரு பொருள் அல்லது பிரச்சினை குறித்து ஒருமுறை தலையங்கம் எழுதியவர், பின்னர் அந்தப் பொருள் அல்லது பிரச்சினை சம்பந்தமாகப் புதிய செய்திகள் வெளியானால், தாம் முதலில் கூறிய முடிவுகளை அவற்றுக்கு ஏற்ப மாற்றிக் கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்”(கலைமாமணி கருப்பையா, நாளிதழ் ஆசிரியர், ப.67) என்று கூறுவதோடு இதில் தயக்கமே கூடாது இத்தகைய மாறுதல்களை வாசகர்களுக்குத் தெரிவிப்பதும் தலையங்கத்தின் கடமையாகும் .தலையங்கம் எழுதுகின்றவர் ஊசலாட்டமற்ற, கொள்கைப்பிடிப்பு மிக்கவராக இருந்தால் தான் தலையங்கம் உயிர்ப்புள்ளதாக அமையும்.

**தலையங்கத்தில் மொழிநடை**

தலையங்கம் எழுதுவோர்க்கு வெளிப்பாட்டு நடையும் (Expository) ஆராய்ச்சி நடையும் (Critical) பயன்படும். தலையங்கம் எழுதும் ஆசிரியர் தன்னுழைப்பும் தெளிந்த அறிவும் நல்லுணர்வும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.அப்போதுதான் அவருடைய தலையங்கம் அதற்குரிய பயனைத் தருவதாக அமையும். எழுத்துக்கும் எண்ணத்திற்கும் தனி மனித வாழ்க்கைத் தூய்மைக்கும் அறிவு நிலைக்கும் பெருத்தத் தொடர்புண்டு என்பதைத் தலையங்கம் உணர்த்தும்.

**முடிவுரை**

தலையங்கத்திற்கு நேர்மையான எண்ணங்கள் இருக்கவேண்டும். நடுநிலை மையோடு செய்திகளை அமைக்கவேண்டும் என்ற சிந்தனையும் தலையங்கம் எழுதும் முறையில் நோக்கம், பிரச்சனை, தீர்வு என்ற மூன்று வகையில் செய்திகள் அமைக்கப்பட வேண்டும். அறிவுறுத்தல் என்ற முறையிலேயே தலையங்கம் அமைக்கப்பட்டாலும் இதழையும்அவற்றின்நன்மதிப்பையும்

பெற்றுத் தரும் அளவுகோலாகவும் அமைகின்றது என்பதைப் பல்வேறு அறிஞர்களின் அவதானிப்புகள் மூலம் அறியமுடிகின்றது.

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்**


- அண்ணாதுரை, மா., பாரதிதாசன் இதழ் பணிகள், பூங்கொடிவெளியீடு, ஈரோடு, 1990.
- இறையரசன், பா., இதழாளர் பாரதி , நிசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு , சென்னை-98, 1995.
- இளங்கோவன், மா.ரா., சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்சேகர் பதிப்பகம், சென்னை - 78, 1980.
- கருப்பையா, நாளிதழ் ஆசிரியர், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1993.
- கிருட்டிணக்குமார், ம.ஏ., தலையங்கம் –ஓர் இதழின் அளவுகோல் சியாமளா பதிப்பகம், 18வது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை-83, 2010.
- குருசாமி.மா.பா., இதழியல்கலைதேன்மொழிபதிப்பகம்,திருச்செந்தூர்,1983.
- கோதண்டபாணி.இரா.,இதழியல்கற்பகம் வெளியீடு, குறிஞ்சி நகர், மதுரை-14, 1987.
- சம்பந்தம்.மா.சு., தமிழ் இதழியல் களஞ்சியம், தமிழர் பதிப்பகம்சென்னை,1987.
- முத்துராசன்.கு., இதழியல் வளர்ச்சியும் மொழி பெயர்ப்பும் முல்லையரசன் பதிப்பகம், திருவண்ணாமலை,1994.
- ராசா, கி., இதழியல் ஓர்அறிமுகம், பாவை பப்ளிகேஷன்ஸ் இராயப்பேட்டை, சென்னை, 2013.